இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 308 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 04 – செவ்வாய்க்கிழமை 18 ஜூன் 2024 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 308 : Thiruvalluvar Year - 2055 - Aani 04 - Tuesday 18 June 2024 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

## சமூக நீதிக்கு எதிரான ‘நீட்’ தேர்வு முறையை ஆதரிப்பதை

# ஒன்றிய பா.ஜ.க. அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, ஜூன் 18 - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் தமது சமூக வலைதள பக்கத்தில் ‘நீட்’ தேர்வு தொடர்பாக பதிவிட்டுள்ளார்.**

**அதில், மாணவர்களுக்கு எதிரான - சமூகநீதிக்கு எதிரான - ஏழைகளுக்கு எதிரான ‘நீட்’ தேர்வு முறையை ஆதரிப்பதை ஒன்றிய பா.ஜ.க. அரசு இத்துடன் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.**



நீட் தேர்வு தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

நீட் தேர்வு தொடர்பாக நடைபெற்று வரும் சர்ச்சைகள், சமத்துவத்துக்கு எதிரான அதன் தன்மையை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

பல ஆயிரம் ஆண்டுகளாகக் கல்வி மறுக்கப்பட்டு வந்த சமூகத்தில் ஒடுக்கப்பட்ட பிரிவினரின் முன்னேற்றத்துக்காக மேலும் பல வாய்ப்புகளை நாம் வழங்கவேண்டும். மாறாக, அத்தகைய மாணவர்களுக்கான வாய்ப்புகளுக்கு ‘நீட்’ தடைபோடுகிறது.

தேசிய தேர்வு முகமை மேல் தவறில்லை என ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் பேசியிருந்தாலும், நடந்து வரும் நிகழ்வுகள் அதற்கு மாறான சித்திரத்தையே அளிக்கின்றன.

தேர்வுக் கண்காணிப்பாளர்கள் பணம் பெற்றுக்கொண்டு விடைத்தாள்களில் திருத்தம் மேற்கொண்டது. அதற்கு ஆதாரமாகப் பல கோடி ரூபாய்க்கான காசோலைகள், தொகை குறிப்பிடப்படாத காசோலைகள் கைப்பற்றப்பட்டது உள்ளிட்ட புகார்கள் மீது குஜராத் காவல்துறையினர் முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்துள்ளனர்.

இந்தச் சதிச் செயலில் பள்ளி முதல்வர், இயற்பியல் ஆசிரியர், பல நீட் பயிற்சி மையங்களும் கூட்டு சேர்ந்து ஈடுபட்டுள்ளனர் என்ற குற்றச்சாட்டு அமைப்பு ரீதியாகவே மாற்றம் தேவைப்படுவதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

நீட் ஒழிப்புப் போராளி மாணவி அனிதா தொடங்கி எண்ணற்ற மாணவர்கள் இத்தேர்வினால் பரிதாபத்துக்குரிய முறையில் தற்கொலை செய்து கொண்டுள்ளதை நாம் பார்த்துவிட்டோம். இனியும் பொறுக்கலாகாது.

தகுதிக்கான அளவுகோல் எனப் பொய்வேடம் தரித்த நீட் தேர்வு சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் ஊடுருவிப் பாதிக்கும் ஒரு மோசடி என்பது திரும்பத்திரும்ப நிரூபணமாகி விட்டது. ‘மாணவர்களுக்கு எதிரான - சமூக நீதிக்கு எதிரான - ஏழைகளுக்கு எதிரான இந்த நீட் முறையை ஆதரிப்பதை ஒன்றிய அரசு இத்துடன் நிறுத்திக் கொள்ள வேண்டும்!

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### விக்கிரவாண்டி இடைத்தேர்தலில்

## அ.தி.மு.க. போட்டியிடாதது பா.ஜ.க. மேலிடத்தின் உத்தரவு!

### காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் விமர்சனம்!

சென்னை, ஜூன் 18 - விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் அ.தி.மு.க. போட்டியிடாதது, பா.ஜ.க. மேலிடத்தின் உத்தரவு என்று காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் விமர்சித்துள்ளார்.

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி கழக உறுப்பினர் நா.புகழேந்தி அவர்கள் மறைவெய்தியதை முன்னிட்டு ஜூலை 10ஆம் தேதி அன்று விக்கிரவாண்டி தொகுதிக்கு இடைத் தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இத்தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணி சார்பில் கழக வேட்பாளர் அன்னியூர் சிவா போட்டியிடுகிறார் என்று கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் அ.தி.மு.க. போட்டியிடாது என்று எடப்பாடி பழனிச்சாமி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் வெளியிட்டுள்ள எக்ஸ் வலை தளப் பதிவில்,

விக்கிரவாண்டி இடைத்தேர்தலைப் புறக்கணிக்கும் அ.தி.மு.க.வின் முடிவு, தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் போட்டியிடும் பா.ம.க. வேட்பாளருக்கு ஆதரவாக மேலிடத்தில் இருந்து வந்த உத்தரவு என்பதற்கான தெளிவான சான்று எனத் தெரிவித்துள்ளார்.

இந்த தேர்தலில் பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க. இரண்டு கட்சிகளும் பினாமி மூலம் மோதுவதாக குறிப்பிட்டுள்ள ப.சிதம்பரம், இந்தியா கூட்டணி தி.மு.க. வேட்பாளரின் மகத்தான வெற்றியை உறுதி செய்ய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தி உள்ளார்.

---

### யாரும் ஆராய அனுமதிக்கப்படுவதில்லை – இந்தியாவில்

## மின்னணு வாக்கு இயந்திரங்கள் ஒரு “கருப்பு பெட்டி”!

### காங்கிரஸ் முன்னணித் தலைவர் ராகுல் காந்தி விமர்சனம்!

புதுடெல்லி, ஜூன் 18 - மின்னணு வாக்கு இயந்திரங்கள் ஒரு “கருப்பு பெட்டி” என்றும், இந்திய தேர்தல் நடைமுறைகள் மீது பெரும் சந்தேகங்களை ஏற்படுத்துவதாகவும் காங்கிரஸ் முன்னணித் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடந்து முடிந்த மும்பை வடமேற்கு தொகுதி மக்களவைத் தேர்தலில் ஏக்நாத் ஷிண்டே பிரிவு சிவசேனா வேட்பாளர் ரவீந்திர வைகர் 48 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இத்தேர்தலின் போது, அத்தொகுதியில் உள்ள வாக்குச் சாவடியில் இருந்த மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்துடன் இணைக்கப்பட்ட தொலைபேசியை ரவீந்திர வைகரின் உறவினர் ஒருவர் வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்விவகாரம் குறித்து காவல்துறையினர் விசாரணை



நடத்தி வருகின்றனர்.

இது குறித்து செய்தியை தனது எக்ஸ் வலைத்தளத்தில் பகிர்ந்துள்ள ராகுல் காந்தி,

இந்தியாவில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஒரு “கருப்பு பெட்டி” என்றும் அவற்றை யாரும் ஆராய அனுமதிக்கப்படுவதில்லை என்றும், நமது தேர்தல் நடைமுறையில் வெளிப்படைத்தன்மை குறித்து கடுமையான சந்தேகங்கள் எழுப்பப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசு அமைப்புகள் பொறுப்பற்றவைகளாக மாறும் போது, ஜனநாயகம் ஒரு ஏமாற்று நாடகமாக மாறி, மோசடிக்கு ஆளாவதாகவும் ராகுல் காந்தி பதிவிட்டுள்ளார்.

இந்நிலையில், ஹேக் செய்யப்படும் ஆபத்து மிக அதிகமாக இருப்பதால் தேர்தல்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை அகற்ற வேண்டும் என்று டெஸ்லா நிறுவன உரிமையாளர் எலான் மஸ்க் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க அதிபர் தேர்தல் இவ்வாண்டு நவம்பர் மாதம் நடைபெறுகிறது. தற்போது அதிபர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை தேர்வு செய்வதற்காக பிரைமரி எனப்படும் உள்கட்சி தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன. இத்தேர்தல்களில் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிடும் ராபர்ட் எஃப் கென்னடி ஜூனியர் வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவில், போர்ட்டோ ரிக்கோவில் நடைபெற்ற பிரைமரி தேர்தலில் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் தொடர்பான நூற்றுக் கணக்கான முறைகேடுகள் கண்டறியப்பட்டதாகவும், நல்வாய்ப்பாக ஆவணங்கள் இருந்ததால், சிக்கல் கண்டறியப்பட்டு வாக்கு எண்ணிக்கை சரி செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஒருவேளை ஆவணங்கள் இல்லையென்றால் நீதிமன்றம் என்ன தீர்ப்பு வழங்கும் எனவும் ராபர்ட் எஃப் கென்னடி ஜூனியர் கேள்வி எழுப்பி இருந்தார்.

ராபர்ட் எஃப் கென்னடியின் இந்த பதிவை மறுபதிவு செய்துள்ள எலான் மஸ்க், “தேர்தலில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை அகற்ற வேண்டும் என்றும், மனிதர்கள் அல்லது ஏஐ மூலம் அவை ஹேக் செய்யப்படுவதற்கான ஆபத்து மிக அதிகமாகவே உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

### நபிகள் நாயகத்தின் போதனைகள்

## மனிதர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அறவழிக்கான அறிவுரைகள்!

### பக்ரீத் திருநாளையொட்டி இசுலாமியர்களுக்கு வாழ்த்து தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் செய்தி!

**சென்னை, ஜூன் 18- முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பக்ரீத் திருநாளை முன்னிட்டு இசுலாமியர்களுக்கு வாழ்த்து தெரிவித்து வெளியிட்டுள்ள செய்தியில், நபிகள் நாயகத்தின் போதனைகள் மனிதர்கள் தங்களின் அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய அறவழிக்கான அறிவுரைகள் என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பக்ரீத் திருநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

நபிகள் நாயகம் காட்டிய வழியில் சமத்துவம் சகோதரத்துவம் - அன்பு நெறி ஆகியவற்றைப் பின்பற்றி வாழும் இசுலாமியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது பக்ரீத் பெருநாள் வாழ்த்துகள்!

ஈட்டிய பொருளில் ஒரு பகுதியை ஏழை எளியோர் இன்னல் தீர வழங்கி மகிழ்வதை ‘ஈத்துவக்கும் இன்பம்’ என்பார் அய்யன் திருவள்ளுவர். அந்த இன்பத்தை எய்திட இசுலாமியப் பெருமக்களுக்கு வழிகாட்டுவதே இந்த பக்ரீத் பெருநாள்! நபிகள் நாயகத்தின் போதனைகள் அன்றாட வாழ்வில் மனிதர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அறவழிக்கான அறிவுரைகளாகவே அமைந்திருக்கின்றன.

நபிகள் நாயகத்தின் அத்தகைய அறிவுரைகளைப் பின்பற்றி வாழ்கின்ற இசுலாமிய மக்கள் அனைவரும் இந்த பக்ரீத் பெருநாளை இனிதே கொண்டாடி மகிழ எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

